අධ්‍යාපන , තොරතුරු තාක්ෂණ අධ්‍යාපන , පෙර පාසල් අධ්‍යාපන , ක්‍රීඩා, සංස්කෘතික කටයුතු,
යෞවන කටයුතු, පුනරුත්ථාපන හා නැවත පදිංචි කිරීමේ අමාත්‍යාංශය.
නැගෙනහිර පළාත
கல்வி, தகவல் தொழிநுட்பக்கல்வி, முன்பள்ளிக்கல்வி, விளையாட்டு, பண்பாட்டலுவலகள்,
இளைஞர் விவகாரம், புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சு
கிழக்கு மாகாணம்
Ministry of Education, Information Technology Education, Pre School Education, Sports,
Cultural Affairs, Youth Affairs, Rehabilitation & Resettlement
Eastern Province

ත්‍රිකුණාමලය | திருகோணமலை | Trincomalee

| | | |
|---|---|---|
| මගේ අංකය / எனது இல. / My No. : EP/3/1/L/15/2018 | ඔබේ අංකය / உமது இல. / Your No. : | දිනය / திகதி / Date : 17.08.2018 |

வலயக் கல்விப் பணிப்பாளர்
வலயக் கல்வி அலுவலகம்
மட்டக்களப்பு.

## அதிபர் வெற்றிடம் நிரப்புதல்
## Bt/Methadist Central College – 1AB

மேற்படி விடயம் சம்பந்தமாக, எமது EP/3/I/L/15/2018 இலக்க 02.07.2018 ந் திகதிய கடிதம் சார்பாக,

எனவே, மேற்படி பாடசாலைக்கு அதிபர் வெற்றிடத்தினை நிரப்புப் பொருட்டு தங்கள் வலயத்தில் உள்ள இலங்கை அதிபர் சேவை வகுப்பு I/II தரத்தில் உள்ளவர்களது தகைமையை கருத்திற் கொண்டு விண்ணப்பங்கள் கோரப்பட்டு, கிடைக்கப் பெறும் விண்ணப்பதாரிகளின் விண்ணப்பத்தினை தங்களின் சிபாரிசுடன், மாகாணக் கல்விப் பணிப்பாளர், கிழக்கு மாகாணம் ஊடாக 15.09.2018 ஆந் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். **(ep.gov.lk என்ற இணையத்தள முகவரியில் பார்வையிடலாம்.)**

**பின்வரும் நிபந்தனைகள் கவனத்திற் கொள்ளப்படும்**

- முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.
- குறித்த தரத்தில் தேவையான விண்ணப்பங்கள் கிடைக்குமிடத்து அடுத்த தரத்திலுள்ளவர்களது விண்ணப்பங்கள் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது.
- விண்ணப்பதாரிகள் 59 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- தேசிய பாடசாலையைச் சேர்ந்த விண்ணப்பதாரிகள், தேசிய பாடசாலைப் பணிப்பாளரின் ஒப்புதலுடன் விண்ணப்பத்தினை சமர்ப்பித்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரிகள் சிறந்த உடல், உள ஆரோக்கியமுடையவராக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரிகளுக்கு நேர்முகப் பரீட்சையின் போது அவர்களது சேவை, கஷ்டப் பிரதேச பாடசாலையில் கடமையாற்றிய அனுபவம், கல்வி மற்றும் பிற தகைமைகள், அதிபராக சேவையாற்றிய காலத்தில் அவர்களது பாடசாலையில் பாடசாலை மாணவர்களது இணைப்பாடவிதான சாதனைகள், மாணவர்களது அடைவினை அதிகரிப்பதற்கான திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டமை போன்றவற்றுக்கு புள்ளிகள் வழங்கப்படும்.
- விண்ணப்பதாரிகள் எச்சரிக்கை தவிர்ந்த ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும்.

ஐ.கே.ஜி. முதுபண்டா
செயலாளர்
கல்வி, தகவல் தொழில்நுட்பக்கல்வி,
முன்பள்ளிக்கல்வி, விளையாட்டு,
பண்பாட்டலுவல்கள், இளைஞர் விவகாரம்,
புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சு
கிழக்கு மாகாணம்

O/C I.K.G.முதுபண்டா
செயலாளர்.

பிரதி:- 1. மாகாண கல்விப் பணிப்பாளர், மாகாண கல்வித் திணைக்களம்(கி.மா)

Inner Harbour Road,
Trincomalee.
General : 026 – 2222176
Fax : 026 – 2222730
Administrative Officer : 026 - 3262961

உட்துறைமுக வீதி,
திருகோணமலை
Secretary : 026 - 2220035
Asst. Secretary : 026 - 2224023
Email : mineducation@ep.gov.lk

වරාය වීදිය,
ත්‍රිකුණාමලය
Asst. Secretary : 026 - 2223223
Accountant : 026 - 2221015